10/=

பக்கங்கள் 06

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 113 வெள்ளிக்கிழமை செப்ரெம்பர் 08 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## உறங்கச் சென்ற மாணவி மாயம்

### வவுனியாவில் சம்பவம்

வவுனியா, மகாறம்பைக்குளம் பகுதியில் உள்ள தனது வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த 14 வயது பாடசாலை மாணவி மாயமாகியுள்ளார். இது குறித்து அந்த மாணவியின் பெற்றோர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

வவுனியா, மகாறம்பைக்குளம், லக்சபான வீதி, முதலாம் ஒழுங்கையில் வசித்து வரும் அன்ரன் அனிஸ்டலா (வயது - 14) என்ற பாடசாலை மாணவியே இவ்வாறு காணாமல் போயுள்ளார். குறித்த மாணவி நேற்று முன் தினம் புதன்கிழமை

06


## ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஆயுள் நீடிப்பு

பெரும் ஊழல், மோசடிகள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரித்து வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக்காலம் செப்ரெம்பர் 3 ஆம் திகதியில் இருந்து உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் மேலும் இரண்டு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆணைக்குழுவின் பதவிக்காலம் கடந்த 3 ஆம் திகதியுடன் முடிவடைந்திருந்தது. இதனால் மேலும் 6 மாதங்களுக்கு ஆணைக்குழுவின் பதவிக்காலத்தை நீடிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

விசாரணை தொடர்பான ஆவணங்களின் முக்கிய விடயங்களை முன்வைத்த பின்னர், ஆணைக்குழுவின் பதவிக்காலம் மேலும் இரண்டு மாதங்களுக்கு மட்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

06



# வடக்கில் இன்னும் ஆயுதக் கலாசாரம்!

பொலிஸ் மா அதிபரின் கண்டுபிடிப்பு

"வடக்கில் இன்னமும் ஏராளமான ஆயுதங்களும், வெடிபொருட்களும் இருக்கின்றன. அந்த மக்களின் எண்ணங்களும், சிந்தனைகளும் ஆயுதக் கலாசாரத்துடன் பின்னிப் பிணைந்துள்ளன. ஆனால் இந்த நிலையில் மாற்றமடைய வேண்டும். இதுகுறித்த நான் தனிப்பட்ட வகையில் கவனம் செலுத்தி வருகின்றேன்" என்று பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

06

## பாலியல் சீர்கேடுகளுக்கு பல்கலை உடந்தையா?

### ஊழியர் சங்கம் கேள்வி



" யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் பாலியல் சீர்கேடுகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படாமையால், பதிவாளரும் பல்கலைக்கழக நிர்வாகமும் அந்தச் சம்பவங்களுக்கு உடந்தையாகச் செயற்படுகின்றனவோ என எண்ண வேண்டியுள்ளது" - இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்க இணைச் செயலாளர் சி.கலாராஜ்.

பல்கலைக்கழக பெண் ஊழியர் ஒருவருடன், நிர்வாக அதிகாரிகள் இருவர் தவறாக நடக்கமுற்பட்டமை குறித்த

06

# பிரபாகரன் இறந்தது எப்போது?



## தகவல் வெளியிட்டார் கமால் குணரத்ன



"2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி காலை 10.30 மணிக்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கொல்லப்பட்டார். அதன் பின்னர் தீவிரவாதம் தொடர்பில் எந்த பிரச்சினையும் இதுவரை ஏற்படவில்லை" என ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ச தலைமையில், "எலிய - ஒளிமயமான அபிலாசைகள்" என்ற பெயரிலான புதிய அமைப்பை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

"உணர்ச்சிகளை இழந்து. கை, கால் என உடல் உறுப்புக்களை இழந்து எமது இராணுவத்தினர் ஏன் யுத்தம் செய்தார்கள்? இவ்வளவு துன்பத்தையும் அவர்கள் ஏன் தாங்கிக்கொண்டார்கள்? இந்த நாட்டில் தமிழ்,

06

## சிலைகளைக் காக்க வவுனியாவில் குழு



வவுனியா நகரப்புறங்களிலுள்ள சிலைகளின் பாரமரிப்பை மேற்கொள்வதற்கும், அந்த சிலைகளுக்கு விழாக்களை ஏற்பாடு செய்வதற்குமான குழு வொன்று உருவாக்கப்பட்டுள்ளது. நகரசபை மண்டபத்தில், நகரசபைச் செயலாளர் ஆர்.தயாபாரன் தலைமையில் நேற்று மாலை நடைபெற்ற கலந்துரையாடலொன்றிலேயே இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

நகரசபைச் செயலாளர் தலைமையில் 20பேர் கொண்டதாக இந்தக் குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது. குறித்த குழு பெரியார்களின் சிலைகள் பாதுகாப்பு, நினைவு தினங்களை மேற்கொள்ளல், விழா ஏற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் தலைமை ஏற்று நிகழ்வுகளை நடத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெறும் வரையே இக்குழு செயற்படும் எனவும், அதன் பின்னர் மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்

06

## மர்மக் காய்ச்சல் மாணவி சாவு

### மந்துவிலில் சோகம்

மர்மக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 10 வயது மாணவி ஒருவர் நேற்றிரவு உயிரிழந்துள்ளார்.

மந்துவில் மேற்கு, கொடிகாமம் பகுதியில் வசித்து வந்தவரும், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் மாணவியுமான ஜெயக்குமார் லக்ஷிகா(வயது-10 ) என்பவரே இவ்வாறு மர்மக் காய்ச்சலால் உயிரிழந்தவராவார்.

இனம் தெரியாத காய்ச்சல் காரணமாக கடந்த 3 மாதமாகப் பாதிக்கப்பட்ட குறித்த மாணவியின் கால்கள் திடீரென வீங்கியதால் உடனடியாக அவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். அங்கு அவரது உடல்நிலை மோசமடையத் தொடங்கியதை அடுத்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

ஆயினும் அங்கும் சிகிச்சை பயனின்றி, நேற்றிரவு 8 மணியளவில் குறித்த மாணவி மரணமானார்.

மாணவியின் இழப்புக்கு துயர் பகிரும் வகையில், சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலைச் சூழலில் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டுள்ளன. (அ)

## கலப்பு முறையிலேயே மாகாணசபைத் தேர்தலும்!

### அனுமதி கொடுத்தது அமைச்சரவை

மாகாண சபைகளுக்கான தேர்தலைக் கலப்பு முறையில் நடத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தேசிய அரசின் வாராந்த அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுக் கூடியது. இதன்போது

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா இதற்கான யோசனையை அமைச்சரவையில் ஒப்புதலைப் பெறுவதற்காகச் சமர்ப்பித்தார். இதற்கு அமைச்சரவை ஏகமனதாகச் சம்மதம் தெரிவித்தது.

இதன்படி மாகாண சபைகளுக்கு உறுப்பினர்கள் 60 சதவீதம் தொகுதிவாரியாகவும், 40 சதவீதம் விகிதாசார முறையிலும் தெரிவு செய்யப்படுவர் எனத் தெரியவருகின்றது.

இதேவேளை, புதிய முறைமைக்கான எல்லை மீள்நிர்ணயப் பணிகள் பூர்த்தியடைந்த பின்னரே மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதென அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் அறியமுடிகின்றது.

எல்லை மீள் நிர்ணயங்களை மேற்கொள்வதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் சகல அரசியல் கட்சிகளினதும் பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்றை நியமிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை புதிய முறைமையின் கீழ் நடத்தி விட்டு மாகாண சபைகளுக்கான தேர்தல்களை மட்டும் பழைய முறைமையின் கீழ் நடத்துவதற்கு எதிர்ப்புகள் வலுத்ததையடுத்தே புதிய முறைமையின் கீழ் அதையும் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. (அ)

### தமிழர் விடுதலைக் கூட்டணி மீது

# சேறுபூசும் ஈ.பி.டி.பி.




தமிழர் விடுதலைக் கூட்டணி எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் வன்முறையில் ஈடுபட்டது கிடையாது. உண்மை நிலை தெரியாமல் எமது கட்சிக்கு களங்கம் ஏற்படுத்த ஈ.பி.டி.பி முயல்கிறது என்று தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் பொது நூல் நிலையத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலாளர் நாயகம் அ.அமிர்தலிங்கத்தின் 90 ஆவது பிறந்ததின நிகழ்வில் ஊடகவியலாளர் ஒருவர் தாக்கப்பட்டிருந்தார். இந்தச் சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்த ஈ.பி.டி.பி. கட்சி , தமிழர் விடுதலைக் கூட்டணியே இந்தச் சம்பவத்துக்குக் காரணம் எனவும், கூட்டணியின் உணர்ச்சி அரசியலால்தான் இளைஞர்கள் ஆயுத மேந்தி அழிவைச் சந்தித்தார்கள் எனவும் தெரிவித்திருந்தது.

இதற்கு மறுப்புத் தெரிவித்து, கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி இன்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

“எமது கட்சி எந்த ஒரு நிகழ்வையும் யாழ்ப்பாணம் பொது நூல் நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தவில்லை. நிலைமை அவ்வாறு இருக்கும் போது விசமத்தனமாக ஒரு அறிக்கையை வெளியிட்டு எம்மை வீண் வம்புக்கு இழுப்பதாகவே தோன்றுகின்றது. ஒரு வேளை நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு இது தெரியாமல் இருக்கலாம் என்றே நினைக்கின்றோம்.

தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சி எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் வன்முறையில் ஈடுபட்டது கிடையாது. மாறாக வன்முறைக்கு எமது தலைவர்களையும் தொண்டர்களையும் பலி கொடுத்துள்ளது. அங்கு நடந்த நிகழ்வு அமரர் அமிர்தலிங்கத்தின் உறவினர்கள் சிலராலும் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களாலுமே ஏற்பாடு செய்யப்பட்டது. அது மட்டுமல்ல தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் என்ற வகையில் என்னைக்கூட அந்த நிகழ்வுக்கு அழைக்கவில்லை.

ஏதோ எங்கள் கட்சி இளைஞர்களுக்கு உணர்ச்சியூட்டிய படியால்தான் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திக் கொலை செய்தார்கள் என்ற பாணியில் ஈ.பி.டி.பி. அறிக்கை வெளியிட்டுள்ளது.

நாங்கள் இரத்தம் சிந்தியாவது எமது இலட்சியத்தை அடைவோம் என்றுதான் தமிழர் விடுதலைக் கூட்டணி கூறியதே தவிர மற்றவர்களின் இரத்தம் சிந்துவதைப் பார்த்து இரசிப்பதற்கல்ல.தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களும் தொண்டர்களும் ஆயுதம் தாங்கியவர்களால் இரத்தம் சிந்தி தமது உயிரைப் பறிகொடுத்தார்கள். இதுதான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வரலாறு. இது ஈ.பி.டி.பி. கட்சிக்கு நன்கு தெரிந்திருந்தும் எமது கட்சிக்கு களங்கம் ஏற்படுத்துவதற்கு முயற்சிப்பதற்கு ஏதோ ஒரு உள்நோக்கம் இருப்பதாகவே நாம் கருதுகின்றோம். இவ்வாறான செயற்பாடுகளை மக்கள் இனியும் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள்” என்று அந்த அறிக்கையில் ஆனந்தசங்கரி குறிப்பிட்டுள்ளார். (ஆ)

# முன்னாள் போராளிக்கு ஆளுநர் சுயதொழில் உதவி



பொருளாதார ரீதியாக நலிவடைந்த முன்னாள் போராளி ஒருவருக்கு வடக்கு ஆளுநர், சுயதொழில் வாய்ப்புக்கான உதவியை உடன் வழங்குவதாக உறுதியளித்துள்ளார்.

வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே வாரம் தோறும் மேற்கொண்டு வரும் மக்கள் சந்திப்பு, யாழ். சுண்டுக்குழியில் அமைந்துள்ள ஆளுநர் பணிமனையில் நேற்று நடைபெற்றுள்ளது.

இதன்போது புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சந்திப்பில் முன்னாள் போராளி ஒருவர் முன்வைத்த சுயதொழில் வாய்ப்புக்கான கோரிக்கையை ஏற்ற ஆளுநர், அது குறித்த ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு தனது செயலாளருக்குப் பணிப்புரை விடுத்தார். குறித்த உதவியைப் பெற்றுக் கொள்ள ஓரிரு வாரங்களில் தன்னைத் தொடர்பு கொள்ளும்படியும் ஆளுநர் குறித்த முன்னாள் போராளிக்குத் தெரிவித்தார். (ஆ)

# மண்சரிவு அபாயம் இன்னும் நீங்கவில்லை

கடும் மழை காரணமாக நாட்டின் பல பிரதேசங்களில் ஏற்பட்டிருந்த வெள்ளம், தற்போது வடிந்தோடத் தொடங்கியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் கூறியுள்ளது.

எனினும் 4 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்து நீடிப்பதாக அந்த நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதிப் கொடிப்பிலி கூறினார். இரத்தினபுரி மாவட்டத்தின் குருவிட, அயகம, கிரிஉல்ல மற்றும் இரத்தினபுரி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும், காலி மாவட்டத்தின் நாகொடை பிரதேச செயலாளர் பிரிவிலும் களுத்துறை மாவட்டத்தின் பாலின்தனுவர, வலல்லாவிட மற்றும் அகலவத்தை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மண்சரிவு ஏற்பட வாய்ப்புள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தற்போது நிலவுகின்ற மழையுடன் கூடிய காலநிலை எதிர்வரும் சில தினங்களுக்கு நீடிக்கும் என்று வானிலை அவதான நிலையம் கூறியுள்ளது. (ஆ)

# சிங்கப்பூருடன் ஒக்ரோபரில் ஒப்பந்தம்

சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை எதிர்வரும் ஒக்ரோபர் மாத இறுதியில் முடிவு செய்யப்படும் என சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம அறிவித்துள்ளார்.

சார்க் முதலீட்டாளர் மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

“இது தொடர்பில் சிங்கப்பூர் தரப்பினருடன் ஐந்து சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்துள்ளன. புதிய துறைகளில் சிங்கப்பூர் முதலீட்டாளர்களை கவர வேண்டும். முதலீடு மற்றும் சேவைகள் என்ற இரண்டு புதிய அத்தியாயங்களை சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்குள் உள்வாங்கியுள்ளோம்” என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

# கரவெட்டியில் தொழிற்சந்தை

கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் ‘மாபெரும் தொழிற்சந்தையும் தொழில் வழிகாட்டலும்’ நிகழ்வு இன்று காலை ஆரம்பமானது. இன்றும், நாளையும் நடைபெறவுள்ள இந்த நிகழ்வின் ஆரம்ப வைபவம் கரவெட்டிப் பிரதேசசெயலர் சிறிமோகனன் தலைமையில் நடைபெற்றது. உதவி அரசாங்க அதிபர் திருமதி சுகுணவதி தெய்வேந்திரம், வேலை வாய்ப்புப் பெறுவதற்காக வருகை தந்த இளைஞர்கள், யுவதிகளுக்கு வழிகாட்டல்களை வழங்கியதுடன், தொழிற்சந்தையையும் திறந்து வைத்தார். (ஆ)






எதிரொலி Ethiroli



# உணவில் நஞ்சு: ஐ.எஸ். அடுத்த திட்டம்





மேற்கத்திய நாடுகளில் செயற்படும் பல்பொருள் அங்காடிகளில் விற்கப்படும் உணவுகளில் விஷத்தைக் கலக்கும் அபாயகரமான திட்டத்துடன் ஐ.எஸ். களமிறங்க இருப்பதாக அதிர்ச்சியளிக்கும் தகவல் வெளியாகியுள்ளது.குறித்த தாக்குதலை பிரிட்டன் மற்றும் அமெரிக்க பல்பொருள் அங்காடிகளில் செயற்படுத்த ஐ.எஸ். அமைப்பினர் திட்டமிட்டுள்ளனர் என்றும் தெரிய வந்துள்ளது.
ஈராக்கின் மொசூல் நகரில் அமைந்துள்ள சிறை ஒன்றில் ஐ.எஸ் அமைப்பினர் குறித்த திட்டத்தை செயற்படுத்தி உள்ளமை தற்போது வெளியாகி அதிகாரிகளை அதிர வைத்துள்ளது.இதே பாணியில், நச்சுஉணவை பெருமளவில் விநியோகம் செய்து மேற்கத்திய நாடுகளில் தாக்குதல் திட்டத்தை ஐ.எஸ். முன்னெடுக்க வாய்ப்பு உள்ளதாக இத்தாலியின் பிரபல செய்தி நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.
ஐ.எஸ். அமைப்பைப் பொறுத்தமட்டில் பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களை பயன்படுத்தி தீவிரவாதத் தாக்குதல்களை முன்னெடுப்பது சர்வ சாதாரணம் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# கௌரி லங்கேஷை கொன்றது யார்?



## விசாரணைக் குழு அமைப்பு

ஊடகவியலாளர் கௌரி லங்கேஷ் படுகொலை செய்யப்பட்டமை குறித்து விசாரிக்க சிறப்பு விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பெங்களூரைச் சேர்ந்த மூத்த பத்திரிகையாளரும், சமூக ஆர்வலருமான கௌரி லங்கேஷ் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு சுட்டுக் கொல்லப்பட்டார்.
இவர் மதவாதத்துக்கு எதிராகத் தொடர்ந்து எழுதியவர்.கௌரி லங்கேஷ் படுகொலை தொடர்பாக விசாரிக்க உளவுத்துறை பொலிஸ் ஐ.ஜி.யான பி.கே.சிங் தலைமையில் சிறப்பு விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.
சிறப்பு விசாரணை குழுவினர் தங்களது விசாரணையை நேற்று ஆரம்பித்தனர்.
காந்திபஜாரில் உள்ள கௌரி லங்கேசின் அலுவலகத்துக்குச் சென்றும் சிறப்பு விசாரணைக் குழு அதிகாரிகள் விசாரணையை மேற்கொண்டனர்.
கொலையாளிகள் சென்ற முக்கிய வீதிகளில் உள்ள கண்காணிப்புக் கமராக்களில் காட்சிகள் எதுவும் பதிவாகி உள்ளதா? ,கொலை நடப்பதற்கு முன்பாக ஒரு வாரம் கௌரி லங்கேஷ் யாருடன் செல்போனில் பேசி இருக்கிறார்? அவருக்கு வந்த அழைப்புகள் யார், யாருடையவை? என்பன பற்றி சிறப்பு விசாரணைக் குழுவினர் ஆய்வு செய்து வருகின்றனர்.இன்னும் சில வாரங்களில் குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துவோம் என பொலிஸ் சிறப்பு விசாரணைக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (இ)

# வேண்டாம் 'தாட்'!




தென்கொரியாவின் சியாங்ஜூ நகரில் அமெரிக்காவின் 'தாட் 'ஏவுகணைத் தடுப்பு அமைப்பை நிறுவுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஏராளமானோர் போராட்டம் நடத்தியுள்ளனர்.
வடகொரிய ஏவுகணைகளைத் தடுக்கும் வகையிலான 'தாட்' ஏவுகணைத் தடுப்பு அமைப்பை தென் கொரியாவின் சியாங்ஜூநகரில், அமெரிக்காவின் உதவியுடன் தென் கொரியா தொடர்ந்து நிறுவி வருகிறது.
இதற்காக பழைய கோல்ப் மைதானம் ஒன்று தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கனவே ராடர் உள்ளிட்ட கருவிகள் இந்தப்பகுதியில் பொருத்தப்பட்டிருக்கின்றன. பாதுகாப்புப் பணிகளுக்காக சுமார் 8 ஆயிரம் படையினரும் குவிக்கப்பட்டுள்ளனர்.
இந்த நிலையில் அமெரிக்காவின் 'தாட்' ஏவுகணைத் தடுப்பு அமைப்பை நிறுவுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சியாங்ஜூ நகரில் நூற்றுக்கணக்கானோர் போராட்டம் நடத்தியுள்ளனர் அதிக சக்தி கொண்ட ராடர் கருவிகள் தென் கொரியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.இதனால் பாதுகாப்பு வீரர்களுக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதில் பலருக்கும் காயம் ஏற்பட்டுள்ளது. அது மட்டுமின்றி போராட்டக்காரர்கள் அமைத்திருந்த கூடாரங்களையும் பாதுகாப்புப்படையினர் அப்புறப்படுத்தியுள்ளனர். (இ)

# 164 உயிர்களைக் குடித்த மழை



பாகிஸ்தானில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் 164 பேர் பலியாகியுள்ளனர்.
பாகிஸ்தானில் பருவ மழை தீவிரம் அடைந்துள்ளது. இடைவிடாது பெய்து வரும் கனமழையால், தற்போது வரை மொத்தமாக 164 பேர் பலியாகி இருப்பதாகப் பாகிஸ்தான் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.
குறிப்பாக சிந்து மற்றும் பஞ்சாப் மாகாணங்களில் கனமழை பெய்து வருவதாகவும், இதனால், நூற்றுக்கணக்கான மக்கள் உறைவிடத்தை இழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஜூன் 26 முதல் செப்ரெம்பர் 6 ஆம் திகதி வரை பெய்த கனமழை காரணமாக 39 குழந்தைகள் உட்பட 164 பேர் பலியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 167 பேர் காயம் அடைந்துள்ளனர் எனவும் 440 வீடுகள் சேதமடைந்து இருப்பதாகவும் பேரிடர் மேலாண்மை அதிகாரிகள் தெரிவித்தனர். (இ)

# பயணிகளை மீட்க பத்து விமானங்கள்



டொமினிக்கன் குடியரசு ,டுர்க்ஸ், கைகோஸ் போன்ற இடங்களில் புயல் வீசும் அபாயம் ஏற்பட்டுள்ளதால், அதற்கு முன்னர் பயணிகளை ஏற்றிவருவதில் கனடாவின்10 விமானங்கள் தீவிரமாக இறங்கியுள்ளன.
மொண்ட்ரியல் நகரில் இருந்து இயங்கும் எயர் டிரன்சட் நிறுவனமும் , கல்கரியில் இருந்து செயற்படும் வெஸ்ட்ஜெட் நிறுவனமும் இணைந்தே குறித்த பணியை முன்னெடுத்துள்ளன.
இதே சமயம் வெஸ்ட்ஜெட் நிறுவனம் மூன்று விமானங்களை கரீபியன் தீவுகளுக்கும் அனுப்பியுள்ளது.இங்குள்ள பயணிகள் அனைவரையும் ஏற்றிவர, போதுமான அளவு விமானங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் குறித்த விமான நிறுவன அதிகாரிகள் கூறுகிறார்கள்.இதேவேளை ரொரண்டோ விமான நிலையத்திலிருந்து உள்ளூர் நேரப்படி காலை 6.30 மணியளவில் ஒரு வெஸ்ட்ஜெட் விமானம் புறப்பட்டுச் சென்றுள்ளமையும் இங்கே குறிப்பிடத்தக்கது. (இ)


# போதைப்பொருள் கடத்தவேயில்லை!



## பிலிப்பைன்ஸ் அதிபர் மகன் வாக்குமூலம்

போதைப் பொருட்கள் கடத்தல் விவகாரத்தில் தனக்குத் தொடர்பு இருப்பதாகக் கூறப்படுவதை பிலிப்பைன்ஸ் அதிபர் ரொட்ரிகோ டுடெர்டேவின் மகன்களின் ஒருவரான பாலோ டுடெர்டே மறுத்துள்ளார்.
செனட் சபை நடத்திய விசாரணையில் தனக்கு எதிரான குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என பாலோ கூறினார். இருந்தாலும், அங்கு எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்க அவர் மறுத்துவிட்டார். சீனாவில் இருந்து மணிலாவுக்கு கப்பல் மூலம் போதைப் பொருட்கள் கடத்தப்பட்டதில் தனக்கு எவ்வித தொடர்பும் இல்லை எனக் கூறுவதற்காக பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியின் மருமகனும் இந்த விசாரணையில் ஆஜரானார்.
போதைப் பொருட்களுக்கு எதிராகத் தீவிர நடவடிக்கைகளை பிலிப்பைன்ஸ் அதிபர் டுடெர்டே கடந்த வருடம் தொடங்கினார். தனது குடும்பத்தினர் யாருக்காவது போதைப் பொருள் வர்த்தகத்தில் தொடர்பிருந்தால், பதவி விலகுவேன் என டுடெர்டே வாக்குறுதி அளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# அணுச்சோதனையால் வந்தது நிலச்சரிவு




வட கொரியாவின் அணு ஆயுதச் சோதனையால் நிலச்சரிவு உண்டாகியமை செய்மதிப் படங்கள் மூலம் தெரியவந்துள்ளது.
மலைப்பாங்கான புங்யி-ரி என்ற இடத்தில் நிலத்துக்கு அடியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வட கொரியா அணு குண்டுச் சோதனையை நடத்தியது. வடகொரியா பற்றி ஆய்வு நடத்தும் "38 நோர்த்" என்கிற ஆய்வு நிறுவனம் வணிக ரீதியான செயற்கைக்கோள் படங்களைப் பயன்படுத்திச் செய்த ஆய்விலேயே இது தெரியவந்துள்ளது.
வட கொரியாவின் இந்த அணு குண்டுச் சோதனை,ரிக்டர் அளவுகோலில் 6.3 எனப் பதிவான சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.வட கொரியா அணு குண்டுச் சோதனை நடத்தியதற்கு மறுநாள் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளதையும், வீசி எறியப்பட்ட சரளைக் கல் குவியல்களையும் காட்டுவதாக "38 நோர்த்" அமைப்புத் தெரிவித்துள்ளது.அத்துடன்புங்யி-ரி அணு குண்டுச்சோதனை நடைபெற்ற இடத்திலுள்ள ஒரு குகை சரிந்துவிட்டதாகவும் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை, வட கொரியா நிலத்துக்கு அடியில் நடத்திய இச் சோதனை, 50 முதல் 120 கிலோ தொன் சக்தி வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.50 கிலோ தொன் என்பது, 1945 ஆம் ஆண்டு ஜப்பானின் ஹிரோஷிமா நகரைத் துவம்சம் செய்த அணு குண்டை விட 3 மடங்கு பெரியதாக இருக்கும். (இ)



ஸ்ரெபென்ஸ் கெய்ஸ் வீனஸ்

# வீனஸ் வில்லியம்ஸ் அதிர்ச்சி!

அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான அரையிறுதியாட்டங்களில் ஸ்ரெபென்ஸ் மற்றும் கெய்ஸ் ஆகியோர் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினர்.

இந்த அரையிறுதியாட்டம் ஒன்றில் களமிறங்கியிருந்த வீனஸ் வில்லியம்ஸ் அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறினார்.

நேற்று நடைபெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் அமெரிக்க வீராங்கனைகளான வீனஸ் வில்லியம்ஸ் மற்றும் ஸ்ரெபென்ஸ் ஆகியோர் மோதினர்.

இதில் ஸ்ரெபென்ஸ் 6:1, 0:6, 7:5 என்ற புள்ளிக் கணக்கில் வீனஸை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு அரையிறுதியாட்டத்தில் அமெரிக்க வீராங்கனைகளான கெய்ஸ் மற்றும் வான்டெவெக் ஆகியோர் மோதினர்.

இதில் கெய்ஸ், 6:1, 6:2 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றார்.

நாளை நடைபெறும் இறுதியாட்டத்தில் கெய்ஸ், ஸ்ரெபென்ஸை எதிர்கொள்ளவுள்ளார்.

நேற்று நடைபெற்ற அரையிறுதியாட்டங்களில் பங்கேற்ற அனைத்து வீராங்கனைகளும் அமெரிக்கர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆண்களுக்கான காலிறுதிப் போட்டியில் முன்னணி வீரர் ரோஜர் பெடரர் ஆர்ஜென்ரீன வீரரிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யார் அந்த தேவதை?



'பிக்பாஸ்' வீட்டுக்குள் நேற்றுமுன்தினம் வையாபுரி, ஹரிஸ் ஆகியோரின் குடும்பத்தினரும் பிந்துமாதவியின் நண்பர்களும் வந்தனர்.

இந்நிலையில், நேற்று சினேகனின் தந்தை மற்றும் கணேசின் மனைவி ஆகியோர் உள்ளே வந்தனர்.

கவிஞர் சினேகனின் தந்தை 'பிக் பாஸ்' வீட்டுக்கு வந்தபோது அவர் உடைந்து அழுததைப் பார்த்து ஏனைய போட்டியாளர்களும் கதறி அழுதனர். அதனால் வீடே நேற்று தந்தை பாசத்தால் நிரம்பியது.

தன்னை எப்படி வளர்த்தார் என நீண்ட நேரம் உணர்வுபூர்வமாகப் பேசினார் சினேகன்.

"கல்யாணம் செய்துகொள்" என சினேகனின் தந்தை தொடர்ந்து கூற, வீட்டில் இருந்த ஏனையவர்கள் "நாங்க இருக்கோம். கண்டிப்பா இந்த வருஷம் நடத்துவோம்" எனக் கூறினர்.

பின்னர் சக்தி பேசும்போது, ஏற்கனவே பொண்ணு ரெடி..." எனக் கூறினார். அது யார் என்பதுதான் தற்போது அனைவரது மனதிலும் உள்ள கேள்வி. (ஒ)



# இலங்கையர்கள் இந்தியாவிடம் ரியூசன் போகவேண்டும்

"தொடர்ச்சியாகத் தோல்விகளைச் சந்தித்த இலங்கை அணி வீரர்கள், இந்திய அணியிடமிருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்" என்று அந்த அணியின் இடைக்காலப் பயிற்சியாளர் நிக் போத்தாஸ் கூறினார்.

இலங்கைக்கு எதிரான டெஸ்ட், ஒருநாள் போட்டிகள் மற்றும் இருபது-20 போட்டி என அனைத்தையும் இந்திய அணி ஒன்றும் விடாமல் அள்ளிக்கொண்டது.

இதுகுறித்துக் கருத்துக் கூறும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"இந்திய அணியைப் பாருங்கள். அது 'ஓல்-பிளாக்' (உலகின் மிகச்சிறந்த ரக்பி அணி) அணியைப் போன்றுதான் உள்ளது. எதிரணிக்குத் துளியும் பிடிகொடுக்காமல் கருணையற்ற வகையில் விளையாடினர். அவர்களது கட்டுக்கோப்பு அபாரமானது. பெரும்பாலான அணிகள் எந்த நிலையை அடைய வேண்டும் என்று விரும்புகிறார்களோ அந்த அணியாக இந்தியா உள்ளது.

இலங்கை அணியினர் தவறுகளிலிருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். அதை விட முக்கியம். இந்திய அணியிடமிருந்தும் கற்றுக்கொள்ளவேண்டும்.

விராட் கோலி களத்தில் எவ்வளவு வேகமாக ஓடுகிறார் என்பதைப் பாருங்கள். ஒரு தலைவராகக் களத்தில் அவருக்குக் கிடைக்கும் மரியாதையைப் பாருங்கள். மற்றவர்களுக்கு அவர் முன்மாதிரியாக இருக்கிறார். இந்திய அணி செயற்படும் விதம், கடைப்பிடிக்கும் அணுகுமுறைகள் மற்றும் அணியில் விராட் கோலி உருவாக்கியிருக்கும் கட்டுக்கோப்பு எல்லாமே கவனத்தை ஈர்க்கும் வகையில் உள்ளன" என்றார். (ஒ)

# ஜோடி இல்லாத த்ரிஷா

கதாநாயகிக்கு முக்கியத்துவம் உள்ள கதையம்சம் கொண்ட படங்களில், த்ரிஷா நடிக்க ஆரம்பித்திருக்கிறார். அப்படிக் கதை கேட்டு ஒப்புக்கொண்ட ஒரு படத்தில், அவர் மருத்துவர் வேடத்தில் நடிக்கிறார். இந்தப் படத்தில் அவருக்கு ஜோடி இல்லை.

த்ரிஷாவுடன் அஜ்மல், சக்தி, டானியல் பாலாஜி ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கிறார்கள். (ஒ)



# அது அருவருப்பு

## இனிமேல் அப்படிச் செய்ய மாட்டேன்

தமிழ் சினிமாவில் நடிகையாகத் தொடங்கி, பின்னர் பொலிவூட், தற்போது ஹாலிவூட் என கலக்கிவருபவர் பிரியங்கா சோப்ரா.

இவர் ஆரம்ப காலத்தில் ஒரு விளம்பரத்தில் நடித்ததை நினைத்தால் தற்போது தனக்கே அருவருப்பாக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

முகத்தை வெள்ளையாக்கும் எனக் கூறி விற்கப்படும் கிறீம் விளம்பரம் பற்றித்தான் இப்படித் தெரிவித்துள்ளார்.

அந்த விளம்பர ஒப்பந்தத்திலிருந்து பின்னர் விலகிவிட்டார் எனவும், இனிமேல் அப்படிப்பட்ட விளம்பரங்களில் நடிக்கவேமாட்டேன் எனவும் தெரிவித்த அவர், நிறம் சார்ந்து உள்ள பாகுபாட்டைத் தான் வெறுப்பதாகவும் கூறினார்.

மாத இதழ் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ஒ)

# திருமகளின் இறுதியாட்டம்: இந்து இளைஞர் - மத்தி மோதல்



அரியாலை திருமகள் சனசமூக நிலையம் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நல்லையா சதீஸ்குமார் ஞாபகார்த்தமாக நடத்திவரும் கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மத்திய விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

இறுதிப் போட்டியில் பங்கேற்கும் அணிகளைத் தெரிவுசெய்வதற்கான இரு அரையிறுதிப் போட்டிகள் நேற்று இரவு நடைபெற்றன.

இதில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் மத்தி 25:21, 25:20, 25:21 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

பின்னர் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் இந்து இளைஞர், 25:21, 27:25, 25:15 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இந்நிலையில், இன்று இரவு 7 மணிக்கு இறுதிப் போட்டி நடைபெறவுள்ளது.

இதில் ஆவரங்கால் அணிகளான இந்து இளைஞரை எதிர்த்து மத்தி மோதவுள்ளது. (ஐ)




# ரயிலில் பாய்ந்து இளைஞன் சாவு

கொழும்பு- கோட்டையில் இருந்து மன்னார் நோக்கிப் பயணித்த ரயிலில் பாய்ந்து இளைஞரொருவர் தற் கொலை செய்துள்ளார்.
அநுராதபுரம் - விக்டரய சந்தியில் இந்தச் சம்பவம் நேற்றிரவு இடம்பெற் றுள்ளது.
இந்தச் சம்பவத்தில் உயி ரிழந்தவர் 28 வயதான அநுராதபுரம் - பெலிகும் புர பிரதேசத்தை சேர்ந்த இளைஞர் ஒருவரே என்று பொலிஸார் தெரிவித்துள் ளனர்.
இவரது சடலம் தற்போது அநுராதபுரம் மருத்துவ மனையின் பிரேத அறை யில் வைக்கப்பட்டுள்ளது.
இந்த இளைஞர் தற்கொலை செய்து கொண்டமைக் கான காரணம் இதுவரை அறியப்படவில்லை. (ஆ)

# குற்றப் புலனாய்வுக்கு பணிப்பாளர் ஷானி

இலங்கைப் பொலிஸ் குற் றப் புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளராக, ஷானி அபேசேகர நியமிக்கப்பட் டுள்ளார். பொலிஸ் ஆணைக்குழுவின் தலை வர் ஆரியதாச குரே இந்தத் தகவலைத் தெரிவித் துள்ளார்.
இலங்கைப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந் தரவின் பரிந்துரையின் பேரிலேயே இந்த நியம னம் வழங்கப்பட்டுள்ளது.
குற்றப் புலனாய்வுப் பிரி வின் பணிப்பாளராக இருந்த, சிசிர மென்டிசுக்கு அண்மையில் சேவை நீடிப்பு வழங்கப்பட்டி ருந்தது.
ஆயினும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகிய சிசிர மென் டிசுக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டமைக்கு மனித உரிமை அமைப் புகள் கண்டனம் தெரி வித்திருந்தன.
இந்த நிலையிலேயே, அவ ருக்குப் பதிலாக குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக ஷானி அபேசேகர உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட் டுள்ளார். (ஆ)

# இன்றைய கருத்தோவியம்



நன்றி - அவந்த ஆட்டிக்கல

# "மாதமொருமுறை சந்திப்போமா?"



நல்லாட்சி அரசாங்கத்தின் பிர தான பங்காளிகளான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறி சேனவும் மாதமொருமுறை சந்தித்துக் கலந்துரையாட முடிவெடுத்துள்ளனர்.
இதன் மூலம் நல்லாட்சி அர சில் ஏற்பட்டுள்ள சிக்கல்க ளுக்கு, சுமுகமான தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் நம்பிக்கை வெளியி டப்பட்டுள்ளது.
இதேவேளை, தேசிய அரசாங் கத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளின் தலைவர் களையும் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்று இடம் பெற்ற பேச்சுவார்த்தையின் போதே, மேற்படி தீர்மானங் கள் எட்டப்பட்டுள்ளன.
இதேவேளை, இரண்டு கட்சி களின் முக்கியஸ்தர்களுக்கு இடையிலான சந்திப்பு, கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற் றது. அந்தச் சந்திப்பையும் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு ஆலோசிக்கப்பட்டு வருவ தாகத் தெரியவருகின்றது. (ஆ)

# கச்சான் கோதுக்குள் ஹெரோயின் மீட்பு

வெலிக்கடைச் சிறைச் சாலைக்குள் கச்சான் கோதுக்குள் மறைத்து வைத்து, ஹெரோயின் போதைப்பொரு ளைக் கொண்டுசெல்வதற்கு முயன்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப் பட்ட சந்தேகநபர், பொர ளைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.
ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில், கைது செய்யப் பட்டு சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள பொரளை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரை பார்வையிடு வதற்கு வருகைதந்தவரே இவ்வாறு கைதுசெய்யப் பட்டுள்ளார்.
சந்தேகநபர் கொண்டுவந்த பொதிக்குள், ஹெரோயின் போதைப்பொருள் அடங் கிய 18 பொட்டலங்கள் இருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஆ)





# அக்கரப்பத்தனையில் 5 வீடுகள் தாழிறக்கம்!

அடைமழை காரணமாக, அக்கரபத் தனை , கல்மதுரை பிரிவில் தோட் டத்தொழிலாளர்களின் ஐந்து வீடு கள் தாழிறங்கியுள்ளன. இதனால் அங்கு வாழ்ந்த ஐந்து குடும்பங்க ளைச் சேர்ந்த 20 பேர் அருகிலுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் நேற்று மாலை முதல் தங்க வைக் கப்பட்டுள்ளனர்.
அத்துடன் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக அங்கு வசிக் கும் 22 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 95 பேர் அபாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அந்தப் பிரதே சத்தில் வசிப்போர் தெரிவிக்கின்றனர்.
நேற்றுமாலை குறித்த 5 வீடுகளி லும் பாரிய வெடிப்புச் சத்தம் கேட் டது. அதனையடுத்து, குறித்த வீடுகளின் ஒரு பகுதி மண்ணுக்குள் கீழிறயங்கிய நிலையில் காணப்பட் டது. இதனையடுத்து பொலிஸாரும், கிராமசேவகரும் அங்கு விரைந்து , வீடுகளில் இருந்த மக்களைப் பாது காப்பாக வெளியேற்றினர்.
சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள அந்தக் குடும்பங்களுக்கு வேண்டிய உலர் உணவுப் பொருட்கள் கிராம சேவகரினால் வழங்கப்பட்டுள் ளன. (ஆ)

# இலங்கை முழுதும் இலவச இணையம்

இலவச இணையவசதியை இலங்கை முழுதும் வழங் கும் திட்டம் விரிவுபடுத் தப்படவுள்ளது.
கடந்த வாரம் வெளியிடப் பட்ட 'வளமான நாடு' என்ற அறிக்கையிலேயே இந்தவிடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது.
நாட்டு மக்களை மேம் படுத்தல் மற்றும் உறவு களை வளர்த்தல் என்னும் வேலைத் திட்டத்தின் கீழேயே, இலவச 'வை-பை' மூலம் இணைய சேவை விஸ்தரிக்கப்படவுள்ளது.
இதன் மூலம் பொருளாதார அபிவிருத்தியையும், தொடர் பாடல் திறனையும் மக்கள் வளர்க்க முடியும் என அர சாங்கம் எதிர்பார்ப்பதாகக் கூறப்படுகின்றது. (ஆ)

## நாளை நாளும் கோளும்

09.09.2017 சனிக்கிழமை ஏவிளம்பி வருடம் ஆவணி மாதம் 24 ஆம் நாள்
திருதியை மு.ப. 10.24 வரை ரேவதி பி.ப. 01.36 வரை மரணயோகம்
இராகுகாலம் 09.04 - 10.34 சுபநேரம் 03.04 - 04.34 எமகண்டம் 01.34 - 03.04

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வாழ்வு | வெற்றி | பொறுமை | தடங்கல் | நன்மை | சுகம் | அமைதி | கவனம் | பாராட்டு | இன்பம் | போட்டி | ஆரோக்கியம் |

எதிரொலி
Ethiroli

## அந்த நாள் ஞாபகம்.....!




### 2008.09.08

தமிழகத்தைச் சேர்ந்த வயலின் மேதை குன்னக்குடி வைத்தியநாதன் தனது 73 ஆவது வயதில் காலமானார்.

# ஹாட்லியில் புதிய கட்டடத் திறப்பு









பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடமும், அதிபருக்கான விடுதியும் இன்று திறந்து வைக்கப்பட்டன. கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதகிருஸ்ணனும், வட மாகாணக் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரனும் இவற்றைத் திறந்து வைத்ததோடு, புதிய தொழில்நுட்ப ஆய்வு கூடத்துக்கான அடிக் கல்லையும் நாட்டி வைத்தனர். (அ-3)

# வெலிக்கடையில் கைதி கொலை

வெலிக்கடைச் சிறைச் சாலையில் கைதி ஒருவர் ஏனைய கைதிகளால் தாக்கிக் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இந்தக் கைதியைத் தனிமைப் படுத்தி அவரை மனநோயாளிக் கைதிகள் அடைத்து வைக்கப்படும் அறைக்குள் வைத்தே தாக்கி கொலை செய்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இந்த அறையில் அடைப்பதற்கு வைத்தியர்களின் பரிந்துரை கட்டாயமானதாகும். ஆனால் தம்மிஷ்டப்படி கைதிகள் சிலர் ஒரு கைதிக்குத் தண்டனை வழங்கியமை பாரதூரமான குற்றம் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தக் கொலைச் சம்பவத்தை அடுத்து குற்றமிழைத்த கைதிகளைத் தடுத்து வைக்க மாற்று ஏற்பாடுகள் எடுக்கப்பட்டு வருவதாகச் சிறைச்சாலைத் தகவல் தெரிவிக்கின்றன. (ஆ)



# கூட்டுக் கடற்பயிற்சி நேற்று ஆரம்பம்

இலங்கை- இந்தியக் கடற்படைகளுக்கு இடையிலான 5ஆவது கூட்டுப் பயிற்சி விசாகப்பட்டினத்தில் நேற்று ஆரம்பமாகியுள்ளது.

இந்தக் கூட்டுப் பயிற்சிக்கு 'ஸ்லினெக்ஸ்-2017 ' என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்தக் கூட்டுப் பயிற்சி ஆண்டு தோறும் இலங்கை- இந்தியக் கடற்படைகளுக்கு இடையில் நடத்தப்பட்டு வருகிறது.

நேற்று ஆரம்பமாகிய கடற் கூட்டுப் பயிற்சி வரும் 14ஆம் திகதி வரை தொடர்ந்து இடம்பெறவுள்ளது. இதில் பங்கேற்பதற்காக இலங்கைக் கடற்படையின் சயுர, சாகர ஆகிய ஆழ்கடல் ரோந்துக் கப்பல்கள் விசாகப்பட்டினம் துறைமுகத்துக்குச் சென்றுள்ளன. (அ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி



**பாலியல்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்பாட்டுக்கு பல்கலைக்கழக நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்காமையைக் கண்டித்து யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் இன்று காலை 10 மணிமுதல் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டது. இது குறித்து தகவல் வெளியிடும் போதே ஊழியர் சங்க இணைச்செயலாளர் கலாராஜ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"பல்கலைக்கழக விருந்தினர் விடுதியில் பெண் ஊழியர் மீது இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து உடனடியாகவே பதிவாளருக்கு, குறித்த பெண் ஊழியர் முறைப்பாடு செய்திருந்தார். ஆனால் பதிவாளர் அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்காமல், விடுதியின் காவலுக்காக அமர்த்தப்பட்டிருந்த தனியார் ஊழியரை அகற்றி, அதற்குப் பதிலாக பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தரைக் கடமையில் ஈடுபடுத்தியுள்ளனர். இதுதான் அவர்கள் எடுத்த நடவடிக்கை.

இப்படி பல்கலைக்கழகத்தில் இதற்கு முன்னரும் பல சீர்கேடுகள் நடைபெற்றுள்ளன. அப்போதும் இவ்வாறே உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்தப் போக்கு இனியும் தொடராதிருக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் வரை எமது போராட்டம் தொடரும். தனியே இது எமது பெண் ஊழியருக்காக மட்டும் நாம் போராடவில்லை. பல்கலைக்கழக மாணவிகளுக்காகவுமே நாம் போராடுகிறோம்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, பல்கலைக் கழக நிர்வாகத்தினருக்கும் ஊழியர் சங்கத்தினருக்கும் இடையிலான சந்திப்பு இன்று பிற்பகல் ஆரம்பமானது. இதில், உடன்பாடு ஏற்பட்டால் போராட்டம் கைவிடப்படும் என்று தெரியவருகிறது.(அ-16)

**உறங்கச் சென்ற...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டில் இரவு உணவு சாப்பிட்டதன் பின்னர் வீட்டில் உள்ள தனது அறையில் உறங்கியுள்ளார். நேற்று அதிகாலை அவரது பெற்றோர் பாடசாலைக்குச் செல்வதற்கு மகளினை எழுப்புவதற்காக, அறைக்குச் சென்றனர். ஆனால் அறையில் மகளைக் காணவில்லை.

அப்பகுதி எங்கும் மகளைத் தேடிய பெற்றோர் எந்தத் தகவலும் கிடைக்காமையால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள். (அ)

**ஜனாதிபதி...**
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் நடந்த ஊழல்,மோசடிகள் குறித்து விசாரணை நடத்த இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

**வடக்கில்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"கடந்த 30 ஆண்டுகளாக இடம்பெற்ற பயங்கரவாதத்துக்கு எதிரான போர் முடிவடைந்து தற்போது ஒன்பது, பத்து ஆண்டுகளே ஆகியுள்ளன.இந்தநிலையில், பொது மக்கள் மற்றும் சமூகவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் குறித்து நாம் கரிசனை கொள்ள வேண்டும். அவர்களில் பலருக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் புனர்வாழ்வு பெறாத இன்னும் பலர் அங்கு இருக்கவே செய்கிறார்கள். பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பட்ட ஏராளமான ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் இப்போதும் அங்கு இருக்கின்றன. அந்த மக்களின் மனநிலையை பார்க்க வேண்டும். அங்குள்ள மக்கள் கல்வி கற்றது, வளர்ந்தது போன்ற அனைத்துச் செயல்களும் ஆயுத கலாசாரங்களின் மத்தியிலேயே இடம்பெற்றுள்ளன. அவர்கள் வெடிபொருட்களை பயன்படுத்தியவர்கள்.அந்த மனநிலை மாற வேண்டும். வடக்கு மக்களின் எண்ணங்களும், சிந்தனைகளும் ஆயுத கலாசாரத்துடன் கலந்தவை. இந்த நிலைமை மாற வேண்டும். இது தொடர்பில் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தியுள்ளேன்.மேலும், இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்துள்ளேன். அதிகாரிகள், படையினருடன் கலந்துரையாடியுள்ளேன். அசம்பாவிதங்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் ஆலோசனையும் வழங்கியுள்ளேன்.விசேட அதிரடிப்படையினர் மற்றும் படையினருடன் இணைந்து செயற்பட்டேன். தற்போது நிலைமைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன" என்றும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (அ)

**சிலைகளைக்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதும் அவர்கள் இதனைப் பொறுப்பேற்று மேற்கொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் பொது அமைப்புக்கள், முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கம், சமூக அமைப்புக்கள், கலாசார மற்றும் சமூக சேவை உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஆ)

**பிரபாகரன்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களம், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதற்காகவே இத்தனை துயர்களையும் தாங்கிக்கொண்டார்கள் . ஆனால் எமது இராணுவத்தினரின் சாதனைகள் பற்றி யாரும் பேசுவதில்லை.வடக்கு மக்களுடன் நாம் இருந்தோம். அவர்களுடைய மனநிலைகள் குறித்து எமக்கு தெரியும். அவர்கள் கோரியது மகிழ்ச்சியான வாழ்க்கையையே, அவர்கள் குடும்பத்துடன் வாழ்வதற்கான சந்தோசமான சூழலையே விரும்பினார்கள்.மகிந்த ராஜபக்சவின் அரசாங்கத்தில் நாம் அவர்களுக்கு அந்த வாழ்க்கையை பெற்றுக்கொடுத்தோம். சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்தோம். தற்போது வடக்கில் குண்டு வெடிப்பதில்லை. மக்கள் பயந்து பங்கர்களுக்குள் மறைவதில்லை. எந்த பிரச்சினையும் இல்லாமல் இருக்கின்றார்கள்.இதற்கெல்லாம் காரணம் எமது படையினர் 2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி காலை 10.30 மணிக்கு புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைக் கொன்றமைதான்" என அவர் மேலும் தெரிவித்தார்.(அ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 08.09.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.